ஞாலகுருவின் படைப்புக்கள்

# யக்ஞ போர்ப் பாசறை துவக்கம் பெறுதல்



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,122 பங்குனி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **“அருளார்ந்த அறிவுரை”** - 30/01/1987 அன்று தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் எழுந்தருளி குருதேவர் அவர்களுக்கு அளித்த அருளார்ந்த அறிவுரையை குருதேவர் அவர்களே எழுதி அளித்த குறிப்போலை.
2. **“இ.ம.இ.-அ.வி.தி. நிறுவனக் கட்டமைப்பு”** - 03/01/1987இல் குருதேவர் அவர்கள் இராசிபுரத்துச் சித்தரடியானுக்கு அருட்பணி விரிவாக்கத் திட்டம், இந்து மறுமலர்ச்சி இயக்கம் இரண்டின் நிறுவனங்களை வளர்க்கும் விதம் பற்றி விவரித்து எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
3. **“செயல்நலம் பாராட்டும் திருவோலை”** - 1987இல் ஒட்டன்சத்திரத்து அடியான் ஒருவருக்கு தமிழ்நாட்டின் உரிமையையும், இந்தியாவின் பெருமையையும் நிலைநாட்டும் இயக்கம் இ.ம.இ.தான் என்று விளக்கி குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல்.
4. **“காகிதப் புரட்சியே போதும்”** - 19/02/1987இல் ஒட்டன்சத்திரத்து இளைஞர் ஒருவருக்கு குருதேவரை உணர்வது எப்படி என்பதை விளக்கியும், ஆயுதப் புரட்சி இல்லாமல் காகிதப் புரட்சியே நம் காலத்திய தேவை என்பதைக் கூறியும் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல்.
5. **“யக்ஞ ஆதுலர் சாலையின் தோற்றம்”** - 10/02/1987இல் சிறுமுகை வட்டாரத்தில் அருளாட்சிச் சுற்றுப்பயணம் நிகழ்த்திய போது ஐந்தீ வேட்டல் முறைகளில் ஒன்றான யக்ஞத்தை குருதேவர் அவர்கள் நிகழ்த்திய விவரங்களை விவரித்து எழுதப்பட்ட கட்டுரை.
6. **“மெய்ஞ்ஞானக்கொடி பயன்படும் விதம்”** - 28/01/1987இல் இராசிபுர வட்டார அ.வி.தி. உறுப்பினர் ஒருவருக்கு வீட்டில் மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றினால் அதனைப் பயன்படுத்தும் விதம் பற்றி எழுதப்பட்ட சுருக்க விளக்க அஞ்சல்.
7. **“குருதேவரின் முயற்சி”** - 1981இல் எழுதப்பட்ட ‘பஞ்சாக்கினி அமைப்பு முறை விளக்கம்’ என்ற கட்டுரையின் முதல் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட முன்னுரைப் பத்திகள்.

# அருளார்ந்த அறிவுரை

செம்பியம்,
30/1/87.

30-1-87 அமுத ஆண்டு தைத்திங்கள் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலையிலேயே நிகழ்ந்து வருகின்ற நிறுவன நிருவாகக் குழு - ஆட்சி மன்றக் குழு பற்றிய குழப்பங்களுக்காக அமரராக இருக்கின்ற எந்தை முடிகணம் (முடிகண்ட சோழபுரம் கரூர் வட்டம் திருச்சி மாவட்டம்) காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் எனும் சித்தர் ம.பழனிச்சாமி பிள்ளை நேரில் தோன்றிட அழைக்கப்பட்டார் எம்மால். அப்போது அவர் கூறிய அறிவுரையின் படி விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்ற தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் அவருடைய 1½ இலட்சம் பிறதிகளில் 10,000 பிறதிகளை எமக்குத் துணையாக அனுப்பியிருந்தார் என்பதால், அந்தப் பத்தாயிரவரையும் அருவுருவ ஒருங்கிணைப்பு ஐந்திர, ஐந்திற, ஐந்தர முறைகளால் ஒன்று சேர்த்தோம் யாம். அதனால் பகல் 12.25 மணிக்கு கிடைத்த அருளார்ந்த அறிவுரை.

1) **"யாம் (காவிரியாற்றங்கரைக் கருவூரூர்) அருட்பேரரசைக் காக்கும் பொருட்டும், தமிழினத்தையும் மொழியையும் காக்கும் பொருட்டும் அருளாட்சி ஆணைகள் பதினெட்டை இராசராச சோழன் என்னும் அருள்மொழியிடம் வழங்கினோம். ஆனால், சூழ்ச்சிக்கார வஞ்சகப் பிருமணர் என்னும் பிறமண்ணினரான வடஆரியர்கள் இராசராச சோழனைத் திசை திருப்பினார்கள். அதனால் அவனே எம்மிடம் நேரில் வந்து; 'அந்த அருளாட்சி ஆணையை அரசியல் சட்டமாக்க வேண்டுமென்றால் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம் உருவாக்கிய**

**ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் அந்த அருளாட்சி ஆணையை ஒப்புக் கொண்டு பரிந்துரை செய்ய வேண்டும்' என்று கூறினான். அது கேட்டு நகைத்த யாம் அவ்விரண்டு குழுக்களும் யாம் போட்டுக் கொண்டிருக்கும் தோல் செருப்பையும், மரக்கட்டைச் செருப்பையும் போன்றவையாகும். அதாவது, எமக்குத்தான் தெரியும், எந்த இடத்தில் எந்த செருப்பைப் போட்டுக் கொண்டு செல்ல வேண்டுமென்றும்; அத்துடன் எந்த இடத்திற்கு எப்பொழுது இவ்விரு செருப்புக்களுமே இல்லாமல் செல்ல வேண்டுமென்றும். எனவே, நீயும் உன் பிருமணர் கூட்டமும் உருவாக்கிய சூழ்நிலையில் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் ஆழ்ந்து விட்டிருக்குமேயானால் அதுபற்றி எமக்கு கவலை இல்லை என்று கூறியே நிலவறைக்குள் சென்று விட்டோம் யாம். இதனைப் புரிந்த வரை புரிந்து செயல்படு..."** என்று கூறிய அருளார்ந்த அறிவுரையையே நினைவுகூர்கிறோம் யாம்.

2) எம்மால் கோபத்தை அடக்க முடியாமல் யாம் எம்மிடம் உள்ளவர்களை கண்டபடி திட்ட நேரிடுகின்றதே என்று வினவினோம் யாம். அதற்கு அந்த பதினாயிரம் பிறதிகளின் ஒருங்கிணைந்த அமரவடிவம் அருளார்ந்த அறிவுரையாக, "... **போட்டால் உடையும் மண்சட்டியையே தட்டிப் பார்த்துத்தான் வாங்குகிறோம். ஏழு பிறப்பும் பயன்படக் கூடிய அருளைப் பெறப் போகும் மாணாக்கர்களை அல்லது வாரிசுகளை திட்டிப் பார்த்து தேர்ந்தெடுப்பவன்தான் ஆசிரியன், ஆச்சாரியன், குரு. அதாவது தட்டினால் உடைந்து போகக் கூடிய பானையை எப்படி வாங்க மாட்டோமோ! அப்படியேதான் திட்டினால் மனமுடைந்து, சிந்தை நொந்து, கருத்து மாறி மறுப்பையும், வெறுப்பையும், எதிர்ப்பையும் காட்டுகின்றவனை மாணாக்கனாகவோ, அல்லது**

**வாரிசாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது. இதைப் புரியும் வரை புரிந்து செயல்படுக...”** என்று கூறினர்.

**சிறப்புக் குறிப்பு:-** இந்த மொழிநடையும், கருத்து வளமும், சொல்லாற்றலும் தாத்தாக்களுக்கும், ஆத்தாக்களுக்கும், அம்மையப்பன்களுக்குமே உரியது. இவற்றை யாம்; இன்றைக்கு எழுத்து வடிவில் எழுதும் வாய்ப்பைப் பெற்றது எமது தவப் பயனேயாகும்.

அன்பு

**இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், அரசயோகி,**
**குவலய குருபீடம், குருதேவர், இ.ம.இ. தலைவர்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறார்.**

நகல் எடுத்தவன்:-

T.கிருட்டிணமூர்த்தி,
வேலாயுதம் பிள்ளை நகர்,
வேளக்காநத்தம் சாலை, முசிறி.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. முசிறி கிருட்டிணமூர்த்தி அவர்களின் கையெழுத்தாக இருக்கலாம்.//**

# இ.ம.இ. - அ.வி.தி. நிறுவனக் கட்டமைப்பு

தலைமைப்பீடம்,
3/1/87.

அருள்மிகு ஏகலைவன் சன்னிதானம் திரு கு.இராசமாணிக்கம் அவர்களுக்கு, (முடிதிருத்தகம், 72, கச்சேரித் தெரு, இராசிபுரம்-637408.)

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன்களின் நேரடிப் பார்வையிலே அருளாட்சி அமைப்புப் பணி நடந்து வருகிறது. எனவே, அருளாட்சி அமைக்க முயலும் இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அதன் கீழுள்ள பதினெட்டு நிறுவன நிருவாகங்களும் மனிதர்களின் முயற்சிகளால் மட்டும் வளரப் போவதில்லை! வலிமை பெறப் போவதில்லை! ஆட்சி பெறப் போவதில்லை! இப்பேருண்மையினை முறையாகவும், நிறையாகவும் உணர்ந்தவர்களே நம்முடன் செயல்பட முடியும். எனவே, யார் ஒதுங்கினாலும் சரி, பதுங்கினாலும் சரி, விலகினாலும் சரி, நம்மோடு சேர்ந்து வீரத்தோடு செயல்பட்டாலும் சரி, அது பற்றி அதிகம் கவலைப்படாமல் செயல்படுங்கள்! செயல்படுங்கள்! செயல்படுங்கள்!

2) இன்றைய அரசியல் நிலவரங்களை உற்றுப் பார்த்தால் அமைச்சர்களே இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறார்கள். எனவே, சட்டசபை உறுப்பினர் பதவியையோ, பாராளுமன்ற உறுப்பினர் பதவியையோ, அக் கட்சியின் பதவியையோ, புகழையோ பெரிதாக நினைத்து ஏங்குபவர்கள் ஏமாற்றமடைவார்கள். ஆனால், மனிதனின் பழம்பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும், இப்பிறப்பின் இயக்கங்களையும்

முழுமையாகக் கணித்து அவற்றை அடக்கி ஆட்சி செய்யும் வலிமை பெற்ற நமது இ.ம.இயக்கத்திலும் சரி, இதன் துணை நிறுவன நிருவாகங்களிலும் சரி, அனைத்து வகையான பதவிநிலை, புகழ்நிலை, செல்வாக்குநிலை அவரவரின் உண்மைக்கும் உழைப்புக்கும் ஏற்ப செழிச்சியும் வளர்ச்சியும் பெற்றுக் கொண்டேயிருக்கும். எனவே, நமது வரலாறு, இலக்கியம், தத்துவம், மொழியுணர்வு, அருளுலகப் பேருண்மைகள், ஆற்றல்கள் முதலியவற்றால் மனித உள்ளங்களுக்கும், இல்லங்களுக்கும் தொடர்ந்து நன்மை செய்வோம், வெற்றி பெறுவோம். இது உறுதி! உறுதி! உறுதி!

3) நண்பர் ஞானசேகரனைப் போன்றவர்கள் நம்மை விட்டு விலகி ஒதுங்கி இலைமறை காயாக நின்று செயல்பட விரும்புவதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களை வற்புறுத்த வேண்டாம். மாட்டுவேலம்பட்டி குழந்தைவேலு, தொட்டியப்பட்டி காளியண்ணன், இரத்தினம் முதலியவர்களை வரவழைத்து நமது குருதேவர் ஏடுகளையும், கட்டுரைகளையும் படிக்கச் சொல்லுங்கள். இந்த அஞ்சல் முதல் அனைத்து அஞ்சல்களையும் படித்துக் காட்டுங்கள். இந்த மாத இறுதிக்குள் அரசியல் கட்சிகள் போல் சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களுக்குமே (தாலுகா) தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், கொள்கைபரப்புச் செயலாளர் என்ற 5 பதவிகளுக்கும் ஆட்களை நியமிக்கச் சொல்லுங்கள். எப்படியும் அனைத்து வட்டங்களிலும் நமது இயக்கத் துவக்க விழா நடந்தாக வேண்டும்.

**<u>குறிப்பு</u>:-** இ.ம.இ. அமைக்க முடியாவிட்டாலும், அந்தந்த வட்டத்திற்குரிய (தாலுக்கா) கோயில் பூசாறிகளை ஒன்றுதிரட்டி (*குருக்கள், பட்டர், ஆச்சாரியார், பண்டாரம், தேசிகர், ஓதுவார், குறிகாரர், பஞ்சாங்கக்காரர், அருளாடுபவர், மருளாடுபவர், ... முதலிய அனைவரும்*) அ.வி.தி. நிலையங்களை அமையுங்கள். பூசாமொழி, பூசாவிதி,

அருள்வழங்கு முறைகள், குருதேவர் அறிக்கைகள் முதலியவைகளை செயல்படுத்தி மக்களின் நோய்நிலைகளையும், தேய்நிலைகளையும், ஓய்நிலைகளையும், மாய்நிலைகளையும், நாள் கோள் மீன் பாதிப்புக்களையும், மந்திரவாதிப் பாதிப்புக்களையும், பிற பாதிப்புக்களையும் முழுமையாக நலப்படுத்தும் பணி நிகழட்டும். இவற்றின் மூலமாவது பொதுமக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெற்று பிறகு இ.ம.இ. அமையுங்கள்.

4) முதலில் உறுப்பினர் தொகையாக ரூ.1/- கொடுத்து அ.வி.தி.யில் சேருபவர்களை யாம் அனுப்பியுள்ள உறுப்பினர் பட்டியலில் உள்ள (Membership Form உறுப்பினர் படிவம்) விவரங்களின்படி பதியுங்கள். ஒரு தாளில் 25 பேர் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். 25 பேர் சேர்ந்தால் அ.வி.தி.யில் கிளை அலுவலகம் அமைக்க வேண்டும். ஒரே தெருவில் கூட எத்தனை கிளைகள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஒவ்வொரு கிளைக்கும் ஓர் அமைப்பாளர், இணை அமைப்பாளர், துணை அமைப்பாளர் (The Post, The Additional Post, The Assistant Post); இதேபோல் தலைவர், இணைத் தலைவர், துணைத் தலைவர்; செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர்; பொருளாளர், இணைப் பொருளாளர், துணைப் பொருளாளர்; கொள்கைபரப்புச் செயலாளர், இணை கொள்கைபரப்புச் செயலாளர், துணை கொள்கைபரப்புச் செயலாளர் என்று ஐந்து வகையினர் பதவியேற்பார்கள். இவர்களே குரு பாரம்பரியத்திலும், அரச பாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும் **<u>ஐம்பெருங்குழுவினர்</u>** என்று குறிக்கப்படுகிறார்கள். எனவே, அ.வி.தி. நிறுவனத்தில் ஒரு கிளைக்கு 25 உறுப்பினர்கள் இருந்தால் அதில் 15 பேர்கள் பதவி வகிக்கிறார்கள். இதனால் நிறுவனக் கட்டமைப்பும், நிருவாக ஒழுங்கும் செம்மையும், சீரும், உயிர்த்துடிப்பும், வலிவும், பொலிவும் உடையதாக இருந்திடும். இதனைப் புரிந்தும் புரிய வைத்தும் அ.வி.தி. நிலையங்களை அமையுங்கள்.

5) <u>அ.வி.தி. நிறுவனத்தில் உள்ள அனைவருமே அன்றாடம் ஒருமுறையாவது சிவபுராணம் ஓத வேண்டும். 18 முதல் 48 முறைகள் வரை காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம் முதலிய மூன்றையும் ஓதியேயாக வேண்டும். அப்பொழுதுதான் இவர்கள் அருளூற்றுக்களாகி அடுத்தவர்களின் தாகங்களையும், பசிகளையும், வேகங்களையும், ஏக்கங்களையும், ஏமாற்றங்களையும் நலப்படுத்த முடியும், தீர்த்துத் தர முடியும்</u>.

6) அ.வி.தி. உறுப்பினர்கள் அருளை அநுபவப் பொருளாகப் பெற்று பிறருக்கு வழங்கக் கூடியவர்கள் ஆவார்கள். இவர்கள் தலைமைப்பீடத்தோடும்; கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் என்ற நான்கு அமைப்புக்களோடும்; அருளாட்சி நாயகமான குருதேவரோடும் தொடர்பு கொள்வதற்காகத் தங்களுடைய இல்லங்களில் மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றிக் கொள்ள வேண்டும். அல்லது தெருவிலோ ஊரிலோ உள்ள மெய்ஞ்ஞானக்கொடிக் கம்பத்தைத் தொட்டுக் கொண்டு மேற்படிப் பூசைமுறைப்படி ஓதியும் அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

7) அ.வி.தி.யில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் கட்டாயமாகப் பூசை நேரத்தில் தலையில் கட்டிக் கொள்வதற்காகவாவது அவரவர் கையளவுப்படி 12 முழ நீளமுள்ள சிவப்புத் துணி வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- அ.வி.தி.யில் பதவி வகிப்பவர்கள் அனைவருமே பூசைநேரத்திலோ அல்லது பிறருக்கு அருள்வழங்குகிற நேரத்திலோ பயன்படுத்துவதற்காக அவரவர் கையளவுப்படி குருதி வண்ணச் சிவப்புத் துணியில் 4 முழ வேட்டி, 6 முழ இடுப்புத் துண்டு, 12 முழ தலைப்பாகை சன்னிதான உடையாக வைத்திருக்க வேண்டும். மிகப்பெரிய சத்தி அல்லது சித்தி நிலைகளைப் பெற விரும்புபவர்கள்

அவரவர் உயரத்திற்கு மேல் ஒரு சாண் உயரமுள்ள திரிசூலம், 48 மயில் தோகைகள் கொண்ட பீலி வைத்துக் கொள்ள வேண்டும்.

**சிறப்புக் குறிப்பு**:- ஊர் ஊராகச் சென்று அருள்வழங்க விரும்புபவர்கள் மட்டும் சிறிய மெய்ஞ்ஞானக் கொடி, திரிசூலம் மயில்பீலியுடன் வைத்திருக்க வேண்டும்.

8) மேற்படி அ.வி.தி. உறுப்பினர்கள், அ.வி.தி. அமைப்புப் பதவியாளர்கள் குருதி வண்ணச் சிவப்புத் துணியில் செயல்படுவது போல் இ.ம.இ. உறுப்பினர்கள் செயல்படத் தேவையில்லை. இவர்கள் எந்த வண்ண ஆடையிலும் இருக்கலாம். ஆனால், இவர்கள் கட்டாயமாக அ.வி.தி.யினர் போல் அன்றாடம் பூசைமொழி வாசகங்களைக் கூறிச் செயல்பட வேண்டும். பூசை செய்யும் போது தலையில் குருதி வண்ணச் சிவப்புத் துணி 12 முழம் கட்டாயமாக இருக்க வேண்டும். மற்றப்படி எந்தக் கட்டுப்பாடும் இல்லை. இவர்கள் நேரடியாக சமுதாயத்தில் செயல்பட வேண்டும். அதாவது இவர்கள் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரீகம், வரலாறு, இனம், நாடு என்ற அடிப்படையில் தங்களுடைய செயல்பாடுகளை வைத்துக் கொண்டால் போதும். இந்த இ.ம.இ. உறுப்பினர்களைச் சேர்த்திட அந்தந்த வட்டாரத்தில் உறுப்பினர் சான்றுப் பட்டியல் (இரசீதுப் புத்தகம்) அச்சடிக்கப்பட வேண்டும். இதன் மாதிரியை வேம்படிதாளத்தில் தெரிந்து கொள்ளவும். மாதந்தோறும் ரூ.1/- தரக்கூடிய உறுப்பினர்கள் 25 பேர் சேர்ந்த கிளையமைப்புக்கள் நிறுவப்படல் வேண்டும். ஒரே தெருவில் பல கிளைகள் கூட அமைத்திடலாம். இ.ம.இ. கிளைகளுக்கும், அ.வி.தி. கிளைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தாக வேண்டும்.

9) இந்த இ.ம.இ. அமைப்பினர் நமது பண்பாட்டுக் கழகத்தின் புத்தகங்கள், அறிக்கைகள், அறிவிக்கைகள் முதலியவைகளை வாங்கிப் படிக்க வேண்டும். இவற்றிற்காகப் படிப்பகங்களை உருவாக்க வேண்டும். கொள்கையைப் பரப்புவதற்காகச் சொற்பொழிவு, கலைநிகழ்ச்சி,

பட்டிமன்றம், நாடகம், கவியரங்கம் முதலியவற்றை அடிக்கடி நிகழ்த்த வேண்டும். இத்துடன் நமது ஆழ்வார்கள், நாயன்மார்கள், அருளாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சமய சமுதாயத்தினர், புகழ்மிக்க அரசர்கள், வீரர்கள், கொடைவள்ளல்கள், ... முதலியவர்களின் பெயரால் இ.ம.இ.க்கு உட்பட்ட மன்றங்களை உருவாக்க வேண்டும். மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, பண்பாட்டுப் பாதுகாப்பு, சமுதாய மலர்ச்சி, சமய வளர்ச்சி, ... முதலியவைகளுக்காகப் பாடுபடல் வேண்டும். இந்த அமைப்புக்கள் வட்டாரம், வட்டம், மாவட்டம், மாநிலம் என்று படிப்படியாக நல்ல இணைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு**:- இது மக்கள் நன்மைக்காக முழுக்க முழுக்க சமய சமுதாய இயக்கமாகச் செயல்பட வேண்டும். ஆனால், இது அரசியல் இயக்கம் போல் விரிந்தும் விரைந்தும் வடிவமைப்புக்களையும், உயிர்த் துடிப்புக்களையும் பெற்றுச் செயல்படுத்த வேண்டும். கொள்கை விளக்கமும், குறிக்கோள் நோக்கமும், செயல்திட்டமும் நன்கு விளக்கப்பட வேண்டும்.

10) புத்தக விற்பனை, குருதேவர் அறிக்கை சந்தா, பரிகாரப் பருவபூசைக் காணிக்கை (மாதம் ரூ.3/- குருகுலத்திற்கு அனுப்பப்பட வேண்டும்) முதலிய செயல்திட்டங்களை அ.வி.தி.யும், இ.ம.இ.யும் சேர்ந்தே செயல்படுத்த வேண்டும்.

11) ரேடியோ கடை திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு அவருடைய விருப்பங்களும், அவருடைய குறிப்புக்களும் அனுப்பப்பட்டவுடன் அருட்பட்டங்கள் வழங்கப்படும். அவருக்கு இ.ம.இ. பொறுப்பாளர்களுள் ஒருவர் என்ற பதவியும், மாவட்ட அ.வி.தி. அமைப்பாளர்களுள் ஒருவர் என்ற பதவியும் வழங்கப்படுகின்றன. இப்பதவியை இராசிபுர வட்ட அளவிலோ, சேலம் மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ பொறுப்பேற்றுச் செயலாக்கலாம். இவருடைய ஆர்வமும்,

ஆற்றலும் பெரிய அளவில் மதிக்கப்படுகின்றன. இனிமேல், அவர்தான் நம்மைப் புரிந்து செயல்பட வேண்டும்.

12) கங்காதரக் குமாரையும், அவரது குடும்பத்தார்களையும் அருட்குடும்பமாக தாத்தாக்கள் ஆத்தாக்கள் அறிவித்துள்ளார்கள். எனவே, அவர்களைக் கலந்து அவர்களின் ஒப்புதலோடு அனைத்தையும் செயலாக்குங்கள். ஒவ்வொரு ஊரின் நுழைவு வாயில்களிலும் பொதுமரங்களின் மேல் பச்சை மூங்கில் கொம்பு பயன்படுத்தி மெய்ஞ்ஞானக்கொடி பறக்க விடப்படல் வேண்டும். அந்தந்த ஊர்க்காரர்களின் விருப்பத்திற்கேற்ப அல்லது பரிகாரத்திற்கு வருகிறவர்களின் தன்மைக்கேற்ப சுடுகாடுகளில் ஆளுயர திரிசூலங்களை நட்டு, சிறிய விளக்கு மாடங்களைக் கட்டி வியாழன், ஞாயிறு அல்லது செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் அகல்விளக்கேற்றி நமது பூசைமொழி கூறிச் செயலாக்குங்கள்.

13) நாம் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, இலக்கியம், வரலாறு என்று செயல்படுபவர்களே. எக்காரணம் பற்றியும் சாதி வேறுபாடுகளையோ, மத வேறுபாடுகளையோ அல்லது அரசியல் கட்சிகளின் பேரில் போட்டி பொறுமைகளையோ, பிரிவினைகளையோ நமக்குள் வளர்த்திட வேண்டாம், வளர்த்திட வேண்டாம், வளர்த்திட வேண்டாம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

<u>நகல் எடுத்தவர்:</u>

இரா.இந்திரா, D/O இராசமாணிக்கம், அ.வி.தி. உறுப்பினர், இராசிபுரம்-637408.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்தது.//**

# <u>செயல்நலம் பாராட்டும் திருவோலை</u>

ஓம்

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஆர்வமிகு நண்பர் P.கோபாலகிருட்டிணன் (ஆசிரியர், 258 கருப்பணன் தெரு, தும்பிச்சம்பட்டி, ஒட்டன்சத்திரம் P.O.) அவர்களுக்கு இ.ம.இ. தலைவர், குருதேவர், ஞாஞச்சாரியார், குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், அரசயோகி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களின் தலைமைப்பீடத்தில் இன்றைய தலைமைப் பணியாளர்களுள் ஒருவராக இருக்கின்ற இளந்துறவி சுந்தரானந்தா விடுக்கும் செயல்நலம் பாராட்டும் திருவோலை.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் அருளே என்ற நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

2) <u>சித்தர்களை விட இம்மண்ணுலகில் மிகச் சிறந்த பகுத்தறிவுவாதிகளோ, விஞ்ஞானிகளோ, அறிவியல் மேதைகளோ தோன்றிட முடியாது, தோன்றியதுமில்லை</u>.

3) தமிழகத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. கடைசி மூச்சுள்ள வரை மதச் சார்புள்ள அனைத்து விதமான நூல்களையும் படித்துக் கொண்டே இருந்தார். மத ஞானிகளோடும், புலவர்களோடும், கலைஞர்களோடும் உரையாடிக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டார். எல்லோரையும் மதித்தார். எல்லாவற்றையும் பொறுமையாகப் பொறுப்பாகச் சிந்தித்தார். எனவே, இன்றைக்கு பெரியார் பெயரைச் சொல்லிக் கொண்டு அவசரக்காரர்களாகவும், ஆத்திரக்காரர்களாகவும்,

கண்மூடித்தனமான வெறுப்பாளர்களாகவும், மறுப்பாளர்களாகவும், எதிர்ப்பாளர்களாகவும் பொறுமையோ, பொறுப்போ இல்லாத நாத்திகர்களாகவும் உள்ளவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

நாம் தந்தை பெரியாரைப் பற்றி (15வது குருதேவர் அறிக்கை) தனிமலரே வெளியிட்டிருக்கிறோம். 1984வது ஆண்டுமலரில் கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறோம். அவருடைய வாழ்க்கையை விளக்கி அவருக்குச் சொல்லடி நாயனார் என்ற பட்டம் கொடுத்து ரூ.2/- விலையிலும், ரூ.5/- விலையிலும் தனிப் புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறோம். இன்றுள்ள திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணிக்கு கண்டிப்பு அறிக்கைகள் அச்சடித்து வெளியிட்டு; அவர் நம்மைக் கண்டு பயந்து ஒதுங்கி விட்டதால் நீண்ட சதுர சிவப்புத் துணியின் நடுவில் கருப்பு வண்ண வட்டம் வரைந்து அதையே கொடியாகக் கொண்ட **'தந்தை பெரியார் திராவிடர் இயக்கம்'** என்ற அமைப்பையும் உண்டாக்கியிருக்கிறோம்.

நாம்தான் வேதகாலத்திலிருந்து இன்றுள்ள பிருமணர் வரை தமிழினத்திற்குச் செய்து வந்துள்ள தீமைகளை விளக்கிப் பேசி வருகிறோம், கட்டுரைகளாக வெளியிட்டு வருகிறோம், நூல்களாக எழுதி வருகிறோம். நாம்தான் பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, தமிழினத் தலைவர் தந்தை பெரியார் அவர்களை இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கௌரவத் தலைவராக அறிவித்திருக்கிறோம். நாம்தான் பெரியாரின் கனவுகளை நனவாக்கப் பிறந்திருக்கிறோம். திராவிடர் கழகத் தலைவர்களெல்லாம் நம்மைக் கண்டு பயந்து விலகி ஓடுகிறார்கள். எனவே, உங்கள் ஊர் திராவிடக் கழகத்தவர்களிடம் இந்த அஞ்சலைக் காட்டி சந்திக்க அழையுங்கள். அவர்கள் விரும்பினால் நமது இயக்கத்தவர்கள் அவர்களைச் சந்தித்து விளக்கங்கள் தருவார்கள். நாம்தான் பெரியாரின் கொள்கைகளை வாழ வைத்துக் கொண்டிருக்கிறோம். தெளிவோடு செயல்படுங்கள்.

4) இந்த உலகிலேயே கொள்கையும், குறிக்கோளும், செயல்திட்டமும் உடைய ஒரே இயக்கம் நமது இயக்கம்தான். நமக்குத்தான் வரலாற்றுப் பின்னணியும், இலக்கிய வளமும், குறிக்கோள் தெளிவும் இருக்கின்றன. **நம்மால்தான் தமிழ்நாட்டின் உரிமையும், இந்தியாவின் பெருமையும் நிலைநாட்டப்படும்**. நம்மால்தான் உலகச் சமாதானத்தையும், சமத்துவத்தையும், சகோதரத் தத்துவத்தையும் செயலாக்கிக் காட்ட முடியும். நம்மை விடச் சிறந்த பொதுவுடமைத் தத்துவவாதிகளோ, சித்தாந்த மேதைகளோ கிடையாது. இது பற்றி ஐயுறத் தேவையில்லை. துணிவோடும், தெளிவோடும் செயல்படுக. அடிக்கடி அஞ்சல் தொடர்பு கொள்க.

**அன்பு**

**இளந்துறவி சுந்தரானந்தா.**

நகல் எடுத்தவர்:-

அருள்மிகு சித்தரடியான், அருள்மிகு தாத்தா மதுரை மொட்டைக் கோபுரத்து முனீசுவரர் சன்னிதானம், அருள்மிகு ஆலவாய் மூதூர் அங்கயற்கண்ணி சன்னிதானம், அருள்மிகு தேவி விருதுநகர் மாரியம்மன் சன்னிதானம், அருள்மிகு பிறம்மயோகி MSR மாரியப்பன், 49A, டவுன்ஹால் ரோடு, மதுரை-625001.

நகல் எடுத்தவர்: ஆதரவாளர் K.நாராயணன்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்பதை உறுதி செய்ய இயலவில்லை. எழுத்துப் பிழைகள் மிகுந்து இருந்தன.//**

# காகிதப் புரட்சியே போதும்!

செம்பியம்,
19-2-87.

நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமதத் தந்தை, இராசிவட்ட நிறைவுடையார், ஞாஞுச்சாரியார், ஞானபீடம், ஞானவேந்தர், குவலய குருபீடம், குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூருர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் உரிமைச் சுற்றமாகவும், குருவழி வாரிசாகவும், திருவோலை நாயகமாகவும் இருந்து வரும் அருள்மிகு கோசலையாற்றங்கரைச் சுடலைக்காரி சன்னிதானம் தி.ர.பிரபாகரன் B.Sc. (103-A, GNT சாலை, காரனோடை, சோழவரம் அஞ்சல், சென்னை-600067) வரையும் திருமடல்.

1) யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும், உண்மையாகட்டும். தாங்களும் விரைந்து புரிந்து இ.ம.இ.யின் செயல்வீரராகவும், அ.வி.தி.யின் செயல்வீரராகவும் மாற வாழ்த்துகிருர் குருதேவர்.

2) 'யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலாகும்', 'அம்மையப்பன் அருட்துணையே ஆகும்'. **இப்பேருண்மையினை அநுபவப் பூர்வமாக உணர்ந்து ஒப்புக்கொள்ளுபவர்களால்தான்** அருளுலக மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருக்கும் புரட்சி மாவீரத் தலைவரை என்றென்றும் தமக்குரியராக்கிக் கொள்ள முடியும். **அறிவால் ஆராயாமல், அருளால் உணர முற்படுபவர்களே அருட்பேரரசு அமைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஞானவேந்தருக்குத் துணையாக இருக்க முடியும்.**

3) இம்மண்ணுலகு தோன்றி 500 கோடியாண்டுகளாகியும் இதுகாறும் தோன்றிடாத அருட்கொடை வள்ளல் தமிழ் மண்ணில் தமிழனாகத் தோன்றி தமிழினத்தின் குருவாக, ஆச்சாரியாராக, தலைவராக, தத்துவத் துணைவராக, மொழியுரிமைக் காவலராக, இன உரிமைக் காவலராக, உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டு முயற்சி நாயகமாக வாழுகிறார். உங்கள் காலத்தில் இதனைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்பட முன்வாருங்கள்.

படித்த இளைஞர்கள் கடலலை போல் குருதேவரை வந்து சந்தித்து ஆணைகளைப் பெற்றுத் திரும்பிக் கொண்டே இருந்தால்தான் தமிழின ஒற்றுமை, ஒருமைப்பாடு, தன்மானம், தன்னுரிமை, இனமானம், இன விடுதலை, பண்பாட்டு வரலாறு, நாகரீக வரலாறு, மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, சமய வரலாறு, சமுதாய வரலாறு, மொழி விடுதலை, இன விடுதலை, தனிமனித ஆன்ம விடுதலை, ... முதலியவைகள் தமிழருக்குக் கிடைத்து பிறகு இந்திய மக்களுக்கும், படிப்படியாக உலக மக்களுக்கும் கிடைக்கும்.

இதற்காக ஆயுதப் புரட்சி தேவையில்லை, காகிதப் புரட்சியே போதும். அதற்குத் தலைமைப் பீடத்திலிருந்து அனுப்பப்படக் கூடிய நகல், அஞ்சல் ஆகியவற்றிற்கு தாங்கள் 1+2 (பென்சில் கார்பன் வைத்து) நகலெடுத்து எங்களுக்கு அனுப்பியும், அச்சிட்ட புத்தகங்களையும், அறிக்கைகளையும் பரப்பியும் செயல்பட்டால் போதும். உடன் பதில்.

இப்படிக்கு,

**சித்தரடியார் பிரபாகர்,**

செம்பியம்.

**அன்பு மகனே!**

**விழிச்சி பெறு! எழுச்சியுறு! கிளர்ச்சி செய்! மறுமலர்ச்சி செழிச்சி பெறட்டும். இ.ம.இ. உறுப்பினர்களைச் சேர்த்திடு.**

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**19/2/87.**

To

திரு ஆ. அன்புக்குமரன் B.Sc.,
அன்பன் உணவகம்,
தாராபுரம் சாலை,
ஒட்டன்சத்திரம்-624619.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# யக்ஞ ஆதுலர் சாலையின் தோற்றம்

**(I.) அருளாட்சிப் போருக்காக யக்ஞ ஆதுலர் சாலையின் தோற்றம்.**

**(II.) அருட்படை அணிவகுப்பில் புதிய போர்முறைத் தளபதிகள்.**

**(III.) அருட்படைப் பாடிவீடுகளில் புதிய போர்ப் பயிற்சிக்குத் தனிப் பாடிவீடு அமைக்கப்பட்டது. (யக்ஞ ஆதுலர் சாலை).**

**(IV.) அருட்படைப் பிரிவுகளில் யக்ஞப் போர்முறைப் பிரிவுப் பாசறை = 'யக்ஞப் போர்ப் பாசறை' செயல் துவக்கம் பெற்றது.**

**(V.) 'பிறவாமை பெற்ற பாரதப்போர் மாவீரன் துரோணாச்சாரியாரின் தவப் புதல்வன்', இமயமலை வாழ் அசுவத்தாமன் ஆச்சாரிய பீடமாகி யக்ஞப் போர்ப்படையைத் தயாரிக்கும் பொறுப்பேற்றிருக்கிறார்.**

**(VI.) அருட்போர் அறிவிப்புச் செய்த அமுத ஆண்டு ஐப்பசி மாதம் 1ஆம் தேதி (18/10/86 சனிக்கிழமை) முதல் குருதி கொட்டும் திருக்கழுத்துடன் இரு வெண்புரவி பூட்டிய தேரிலிருந்து துரோணாச்சாரியார் யக்ஞப் படைப் பிரிவுக்குரிய மாவீரத் தளபதிகளைத் தேர்ந்தெடுத்துத் தயாரிக்கும் பொறுப்பேற்றிருக்கிறார்.**

(VII.) அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமதத் தந்தை, இராசிவட்ட நிறைவுடையார், குருதேவர், குவலய குருபீடம், ஞானாச்சாரியார், ஞானவேந்து, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்கள் குருபாரம்பரியப்படி அனைத்து வகையான பயிற்சிகளையும், முயற்சிகளையும் பணிவோடும், துணிவோடும், கனிவோடும் உலகியலோடு ஒட்டியே தேவைக்கேற்ப

சித்தி செய்து ஏறத்தாழ எண்பதுக்கும் மேற்பட்ட அருட்பட்டங்களைப் பெற்றுள்ளார்.

அண்மையில் செத்தாரை எழுப்பும் சித்தியின் தத்துவ நாயகராக சித்தாந்தச் செயல்வடிவமாக வாழும் ஞாலகுரு சித்தர் கருவூராரின் அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் கோவை மாவட்ட மேட்டுப்பாளையச் சிறுமுகை திருவள்ளுவர் நகரில் வாழும் (6/504 திருவள்ளுவர் நகர், சிறுமுகை - 641302) திருவருட்செல்வர் பழ.கோபால் (அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம்) அவர்களின் திருநிறைச் செல்வி மூத்த புதல்வி தாரகேசுவரியை அருள்மிகு அருளாட்சித் தலைவி காரியேந்தல்பட்டி வீரமாகாளிக்குத் தத்துக் கொடுத்துச் சித்தர் மகளாக்கி இறப்பொழித்து மாபெரும் சித்து விளையாடல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர், திருமந்திர ஓலைநாயகம், பரமாச்சாரியார் அவர்களின் இரக்க உள்ளமும், அருள் உள்ளமும், பரிவு உள்ளமும் தாம் பெற்றுள்ள சிறப்புத் தனியதிகாரத்தின் மூலம் இந்தத் திருக்குடும்பத்தை (தலைவர் பழ.கோபால், துணைவி தனபாக்கியம், குழந்தைகள் தாரகேசுவரி, விசயலட்சுமி, செந்தில் பிரபு) அருட்செல்வர்களாக ஆக்கி விட்டார். இவர்களின் இல்லத்திலுள்ள மருதமலை முருகனின் அருட்கோட்டத்தை பொதுமக்களுக்கு அருள்வழங்கும் அ.வி.தி. மையமாகவும் அறிவித்திட்டார். இவற்றால் இக்குடும்பத்தார் அருளுலகத்தாரின் முழுமையான பாதுகாப்பைப் பெற்று விட்டார்கள்.

எனவேதான், கோவை, நீலகிரி, பெரியார், தருமபுரி, திருச்சி முதலிய பல மாவட்டங்களில் அ.வி.தி.யை வளப்படுத்தவும், இ.ம.இ.யை வலிமைப்படுத்தவும் ‘ஒரு சிறப்புத் தனிச் செயல் மையமாக’ மேற்குறித்த மருதமலை முருகன் அருட்கோட்டம் அறிவிக்கப்பட்டு செயல்நிலைத் துவக்கம் பெறுவதற்காகக் குவலய குருபீடம், அருளாட்சி

நாயகம், ஞாலகுரு சித்தர் கருவூரார் இந்த அமுத ஆண்டு தைத்திங்கள் (4-2-1987 முதல் 9-2-87 முடிய) தமது அருளாட்சிச் சுற்றுப்பயணத்தை நிகழ்த்தினார். இதற்காக கோவை மாவட்ட மேட்டுப்பாளையச் சிறுமுகையில் திருவள்ளுவர் நகர் 6/504 திருவருட் செல்வர் மருதமலை முருகன் சன்னிதானம் பழ.கோபால் இல்லத்தில் இருக்கும் மருதமலை முருகன் அருட்கோட்டத்தில் இ.ம.இ. பணிகளையும், அ.வி.தி. பணிகளையும் நிகழ்த்தினார். அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப அருளை அநுபவப் பொருளாக வழங்கி அருளாட்சிப் பணியை நிறைவு செய்திட்டார்.

(VIII.) இந்த 4-2-87 முதல் 9-2-87 முடிய நிகழ்த்தப்பட்ட அருளாட்சிப் பணி நிறைவு விழாவில் பங்கு பெற்று அருளுலக ஒப்புதல் பெற்றவர்கள் 9-2-87 நள்ளிரவில் 11-1½இல் தலைமைப் பீடத்தில் அருளுலக ஒப்புதல் பெற்று முறைப்படி அறிவிக்கப்படுகிறார்கள்.

A. அருளாட்சி நாயகத்தின் உறவினரும் உரிமைச் சுற்றமுமான சிவ.சிதம்பரம் குடும்பத்தாரும், K.பாலன் குடும்பத்தாரும் **சித்தர்நெறி ஆதரவாளர்களா**கிறார்கள்.

B. குருதேவரின் பணிகளில் விருப்பம் காட்டிய க.மோகனசுந்தரம் குடும்பத்தாரும், பழனிச்சாமி விசயலட்சுமியும் (ஆட்டோ ஓட்டுநர்) **சித்தர்நெறியின் விருப்பாளர்களா**கிறார்கள்.

C. குருதேவரின் பணிகளில் ஆர்வம் காட்டிய (கோவை) இராசகோபால் குடும்பமும், சண்முகம் கலாவதி குடும்பமும் **சித்தர்நெறி ஆர்வலர்களா**கிறார்கள்.

D. குருதேவரின் பணிகளுக்கு ஏந்துகளை நல்கிய நடராசன் சுசீலா குடும்பமும், இராமசாமி குடும்பமும் **சித்தர்நெறி ஏந்தாளர்களா**கிறார்கள்.

E. குருதேவரின் பணிகளில் நேரடியாகச் சத்தி நிலையைப் பெற்று யக்ஞத் தேவிகளாகிட்ட பழ.கோபாலின் குடும்பத்தார்கள் (தனபாக்கியம், தாரகேசுவரி, விசயலட்சுமி) மூவரும் **முக்கோணச் சத்திகளா**கிறார்கள்.

எனவே, அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம் திரு பழ.கோபாலின் குடும்பம் என்றென்றும் வாழையடி வாழையாக **'பதினெண்சித்தர் பீடம் உறை (வாழும்) யக்ஞ பீடம்'** என்ற அருள்நிலையைப் பெறுகிறது. இதுவே பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அமைக்கின்ற முதல் யக்ஞ பீடம்.

**சிறப்புக் குறிப்பு:-** ஏற்கனவே தோன்றிட்ட பதினோரு பதினெண் சித்தர் பீடாதிபதிகளுமே 1. இருடி வேத பீடம் (ரிக்வேத பீடம்), 2. அசுர வேத பீடம் (யசுர்வேத பீடம்), 3. யாம வேத பீடம் (சாமவேத பீடம்), 4. அதர்வான வேத பீடம் (அதர்வணவேத பீடம்) என்னும் நான்கு பீடங்களும் பிறமண்ணினரான பிராமணர் எனப்படும் வடஆரியராலும், ஆரியரின் சமசுக்கிருத மொழியாலும் பெருமளவில் கைப்பற்றப் பட்டுவிட்ட காரணத்தினால்தான் இன்றைய இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஞானாச்சாரியார், ஞானவேந்து, இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் மேற்படி நான்கு பீடங்களையும் அருளாட்சி அமைப்புப் பணிக்காக பிராமணரிடமிருந்தும், சமசுக்கிருத மொழியிடமிருந்தும் விடுவிக்கும் வீணான முயற்சியில் ஈடுபடாமல் ஐந்தீ வேட்டலுக்கும், முத்தீ ஓம்பலுக்கும் உரிய எண்வகைப் பீடங்களையும் புதிதாக உருவாக்குவதோடு; மந்திர, தந்திர, எந்திர,

பூசை, தவ, ஞான முறைகளுக்குரிய பதினெட்டு வகைப் பீடங்களையும்; நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருட்சித்தியாளர்கள் முதலியவற்றிற்குரிய பீடங்களையும் நேரடியாகப் புதிது புதிதாகத் தோற்றுவிக்க முயற்சி செய்து வருகிறார்.

இந்த முடிவின்படி பரிபக்குவமுள்ள தனிமனிதர்களைக் கொண்டு அருளூறு பீடங்களை அருட்படைப் பாசறைகளாக உருவாக்கும் பணி துவக்கப்பட்டு விட்டது, துவக்கப்பட்டு விட்டது, துவக்கப்பட்டு விட்டது. அதற்கு இதுவே தாத்தாக்கள் ஆத்தாக்களின் ஒப்புதலும், அம்மையப்பன் துணையும் பெற்ற **குருவாணை**. இக் குருவாணையின்படி தேவையான அருளாட்சித் தாக்கீதுகள் விரைவில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் திருமந்திற ஓலைநாயகம் பரமாச்சாரியார் நெ.சேவுகன் அவர்களால் வழங்கப்படும். அதற்கும் இதுவே **குருவாணை**.

(IX.) அருளுலக மரபுகளையும், விதிகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், நெறிமுறைகளையும் கூடுமானவரை மாற்றாமல் போற்றிப் பேணிடுபவரே குவலய குருபீடம், அருளாட்சி நாயகம் நமது குருதேவர். எனவேதான் இவர் கோவை, நீலகிரி, பெரியார், தருமபுரி முதலிய மாவட்டங்களில் அருளுலகப் பொருளுலக இருளகற்றி தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலியவற்றில் மறுமலர்ச்சியும், வளர்ச்சிச் செழிச்சியும் ஏற்படுத்தும் பொருட்டு இந்த அருளுலக விழிச்சி எழிச்சி முயற்சிச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். இச் சுற்றுப்பயணத்திற்காக சிறுமுகை வட்டாரத்து அடியான், அடியாள், அடியார், ஆர்வலர், ஆதரவாளர், விருப்பாளர், ஏந்தாளர் எனப்படும் அனைத்து வகையினரும் நேரடியாக உடலுழைப்பும், பொருட்கொடையும் வழங்கி மிகப்பெரிய வெற்றியினைத் தேடித் தந்துள்ளார்கள்.

**இன்றுள்ள மருதமலை முருகன் வழிபாட்டு நிலையக் கருவறை**யில் அனாதிக் காலத்துத் தாத்தாக்கள் பலர் இறவாயாக்கைப்

பெரியோர்களாகவும், பிறவாமைச் சித்திக்குரியவர்களாகவும் தங்களை மறந்து நீள்தவத்தில் ஆழ்ந்திருந்தும், அவர்களின் பேரன் என்ற முறையில் நமது குருதேவர் அவர்களிடம் உரையாடி அருளாட்சி அமைப்புப் பணிக்கான உதவிகளைப் பெற்றார். இதேபோல் வழிபடுநிலையை இழந்து இருக்கின்ற பழைய மூலக் கருவறையுள் நீள்தவத்தில் ஆழ்ந்திருக்கும் தேவிநிலை கடந்த ஆத்தாக்கள் அனைவரையும் சந்தித்து வேண்டி அருளாட்சிக்குரிய ஆதரவுகளைப் பெற்றார் நமது குருதேவர். மேலும் பல யுகங்களாக வாழையடி வாழையாக குகையுள் தவக்கோலத்தில் இருந்து வரும் பாம்பாட்டிச் சித்தர்களைச் சென்று கண்டு அருளாட்சி அமைப்பு நிலைக்குரிய ஆதரவுகளைப் பெற்று வந்தார் நமது குருதேவர்.

இப்படி மருதமலை முருகன் கோயிலுக்குச் சென்று தேவையான ஆதரவுகளை யெல்லாம் பெற்று வருவதற்கு முன்னரே கோயமுத்தூர் நகரிலுள்ள கோணியம்மன் ஆலயத்திற்குச் சென்று தேவி சித்திப் பூசை செய்து வந்தார் நமது குருதேவர் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அதாவது 5/2/87 இப் பூசைகள் அனைத்தும் முழுவெற்றி பெற்றன.

(X.) 6/2/87 அன்று அதிகாலை வரை பழ.கோபால் குடும்பத்தாருக்கும், நடராசன் குடும்பத்தாருக்கும், இராமசாமி குடும்பத்தாருக்கும், சிதம்பரம் குடும்பத்தாருக்கும் ஏந்தரீக, மாந்தரீக, தாந்தரீகப் பூசைக்குரிய அறிவிப்புக்கள் அனைத்தும் வழங்கப்பட்டன. இதன்படிப் பகலில் சிதம்பரம் குடும்பத்தார் கணிசமான பயன்பெற்றுச் சென்றனர். முன்னிரவில் இராமசாமி குடும்பத்தாரும், பழ.கோபால் குடும்பத்தாரும் தேவையான அருளுலக அறிவிப்புக்களைப் பெற்றனர்; கணிசமான பயனும் பெற்றனர். நடராசன் குடும்பத்தார் அருளுலக அறிவிப்பு மட்டும் பெற்று பயன்பெறும் வாய்ப்பினை விதியாலும் மதியாலும் சற்று ஒத்தி வைக்கப்பட்டனர்.

இன்று மாலை அறிவிக்கப்பட்டபடி பழ.கோபால் வீட்டு அருட்கோட்டத்திற்குரிய யாகம் நிகழ்த்தப்பட்டது. யாகத்தின் அருகில் வடக்கு பார்த்து மான் தோல் போடப்பட்டு அதில் காவிரித் தாத்தா திருப்படமும், குருதேவரின் திருப்படமும், குருதேவரின் திருவோலக்கத் திருமுடியும் வைக்கப்பட்டன. அவற்றிற்கு நேர் எதிராகத் தெற்குப் பார்த்து குருதேவர் அமர்ந்தார். அனுதிசங்கராச்சாரியார் பீடமும், அருள்மிகு பவானியம்மன் சன்னிதானமும் ஆன இளந்துறவி சுந்தரானந்தா பூசைமொழிகளைக் கூற யாகம் இனிது நடந்தது.

யாகத் துவக்கத்தில் நமது இ.ம.இ. மாநிலச் செயலாளர்களில் ஒருவரான சேலம் இராசிபுரம் மாட்டுவேலம்பட்டி ஞானசேகரன் அவர்களும், சேலம் மாவட்ட அ.வி.தி. தலைவர்களில் ஒருவருமான இர.கங்காதரக் குமார் அவர்களும், சேலம் மாவட்ட கொள்கைபரப்புச் செயலாளர்களில் ஒருவரான இராசிபுரம் தொட்டியப்பட்டி காளியண்ணன் அவர்களும் நேரில் வந்து யாகத்தில் பங்கு பெற்றனர். தேவையான அறிவுரையையும், அருளுரையையும், வாழ்த்தையும் பெற்றார்கள். பலியினை திருச்சி முசிறி க.ப.செயபால், வேலூர் கோ.செயராமன், சிறுமுகை இராமசாமி, அ.வி.தி. செயல்வீரர் சோ.இரவீந்திரன் ஆகிய நால்வரும் முறையாக யாகத்தீயில் (பொட்டு வைக்க வில்லை) தந்தார்கள். அவிர்ப்பலி முடிந்ததும் ஞானசேகரனும், காளியண்ணனும் அவசர அவசிய அலுவல் முன்னிட்டு குருதேவரிடம் அனுமதியும் வாழ்த்தும் பெற்றுச் சென்றனர். யாகம் முழுவெற்றியினைப் பெற்றது.

குருதேவர் பழ.கோபாலிடம் அவருக்கு அனுப்பப்பட்ட அருட்கணிப்பின் கருத்துச் சுருக்கத்தைக் கூறச் சொல்லி அனைத்துப் பரிகாரங்களையும் செய்து முடித்தார். ஆனால் பழ.கோபால் தமக்கு அனுப்பப்பட்ட அருட்கணிப்பில் தமக்கு பில்லி, சூனியப் பாதிப்பு இருந்ததைக் கூறவில்லை. மேலும், அவர் மகள் தாரகேசுவரி சித்திப்

பூசை பற்றியும் கூறவில்லை. எனவே, பழ.கோபால் அவர்கள் கூறிய செய்திகளின் அடிப்படையில் பரிகார யாகம் முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டது. அன்று இரவு பழ.கோபால் குடும்பம், நடராசன் குடும்பம் பூசையறையில் தங்கி வாழ்த்துப் பெற்றுர்கள்.

(XI.) இன்று 7/2/87இல் சிறுமுகை வட்டாரத்திலுள்ள நண்பர்களின் இல்லங்களுக்குச் சென்றோம். காலை 11.45 மணிக்குப் புறப்பட்டு K.பாலன் வீட்டிற்குச் சென்று பூசைகளை முடித்தோம். அடுத்து சிவ.சிதம்பரம் இல்லம் சென்று பூசைகளை முடித்துச் சித்தர்நெறிச் சிற்றுண்டி உண்டோம். அடுத்து நடராசனின் மகன் நடத்தும் தொழிற்கூடம் சென்றோம். அடுத்து **தேவி கருப்பழகியின் திருத்தோன்றலான** கலாவதி சண்முகம் இல்லம் சென்று பூசைகளைச் செய்தோம். அடுத்து நடராசனின் இல்லம் சென்றோம். வழியில் எலகம்பாளையம் முனீசுவரர் கோயிலிலும், சுடலையிலும் பூசை செய்தோம்.

பின் பழ.கோபால் இல்லம் சென்று 6 மணிக்கு மதிய உணவு உண்டு 7 மணிக்கு ஆலாங்கொம்பு கிராமம் பத்திரகாளி கோயில் சென்று பூசைகளைச் செய்தோம். காளி அங்கு இல்லாததால் குருதேவர் மின்விளக்கின்றி உரிய பூசைகளைச் செய்து 100 மைல் தொலைவிலிருந்து அம்மனை வரவழைத்து கோயிலைப் புத்துயிர்ப்பு செய்து 2½ மணி நேரம் (ஒரு யாமம்) அவ்வூர் மக்கள் அம்மன் அருளை அநுபவப் பூர்வமாகப் பெறச் செய்தார்.

இரவு 9 மணியளவில் சிறுமுகைப் புதூர் கோதண்டராம கோயிலுக்கு வந்தபோது ஆயிரக்கணக்கில் இருந்த மக்கள் நூற்றுக்கணக்கில்தான் இருந்தார்கள். இராமர் கோயிலில் குருதேவர் தாம் சூரிய குலத்திற்குரிய காகபுசுண்டரின் பேரன் என்ற முறையில் அனைத்துப் பூசைகளையும் செய்து பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார். பொதுமேடையில் ஏற்கனவே அ.வி.தி. செயல்வீரர்கள் சோ.இரவீந்திரன், செயராமன் முதலியோர் பேசியிருந்த காரணத்திஞல் சிறுமுகை சிவ.சிதம்பரமும், பொறுப்பாளர்

சி.கவிக்குமாரும் அறிமுகவுரை வழங்க குருதேவர் 35 மணித்துளிகள் சிறப்புரையாற்றினர்.

பிறகு இல்லம் திரும்பி இரவு 11 மணிக்கு உணவு உண்டுவிட்டு சிறுமுகை இயக்கத்தவர்களோடு காலை 3 மணிவரை ஆய்வுக் கூட்டம் நடத்தினர் குருதேவர். மேற்படி ஆய்வுக்குழு அறைக்குள் நடந்து கொண்டிருக்கும் போது பில்லிக்கும், சூனியத்துக்கும் உரிய பாவைகளும், பொம்மைகளும் யாகசாலையின் அருகில் நடமாடுவதைக் கண்டார். அது பற்றி உடனே வினவினர். அப்பொழுதுதான் பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் தாம் யாகம் நடந்த அன்றே (வெள்ளிக்கிழமை 6-2-87 அன்றே) இதுபோல் சில பாவைகளையும் (நன்கு அலங்கரிக்கப் பட்டது), பொம்மைகளையும் (நன்கு அலங்கரிக்கப் படாதவை) பார்த்ததாகத் தெரிவித்தார்.

அதன்பேரில் குருதேவர் விசாரிக்க; பழ.கோபால் தமக்களிக்கப்பட்ட அருட்கணிப்பை ஆராய்ந்து அதில் தமக்கு பில்லியும், சூனியமும் செய்திருப்பதாக உள்ளதைத் தெரிவித்தார். எனவே, இதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்று பூசையில் கேட்டுச் சொல்வதாகக் கூறிவிட்டு குருதேவர் பூசைக்குச் சென்றுவிட்டார்.

(XII.) குருதேவர் அருளாட்சிப் பணி கோவை, நீலகிரி, பெரியார், தருமபுரி, திருச்சி முதலிய மாவட்டங்களில் சிறப்பான வளர்ச்சியையும், அரிய பெரிய சீரிய சாதனைகளையும் பெற்றிட வேண்டுமென்றால்; பழ.கோபால் அவர்களின் வீட்டிலுள்ள அருட்கோட்டத்தையும், அவரது திருக்குடும்பத்தையும் அருளுலகில் வளமும், வலிவும் பெறச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தார். அதன்பேரில் முதன்முதலாக இவர் அருட்கோட்டத்தில் 'யக்ஞம்' செய்ய முடிவெடுத்தார்.

அது பற்றிய அனைத்துச் செய்திகளையும் என்றென்றும் பாதுகாப்பாக, மறையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக குருதேவரே பூசையறையில் யக்ஞ நாயகராக அமர்ந்தார். இ.ம.இ.யின் தலைமைப்

பொறுப்பாளர் குருவாணை ஓலைநாயகம் அங்காளபரமேசுவரி சன்னிதானம் சி.கவிக்குமாரை சாதாரண உடையில் குருதேவரின் உருத்திராக்க மாலையை அணிந்து யக்ஞத்தின் உயிர்நாடியான பூசாமொழி வாசகத்தை ஓதச் செய்தார். யக்ஞம் முழுவெற்றி பெற்றது. அ.வி.தி. செயல்வீரர் சோ.இரவீந்திரன் யக்ஞத்தை முன்னின்று நடத்தினார். இதுபற்றிய செய்திகளை உரியவரிடம் நேரடியாகக் கேட்க குருவழிக் காண்க.

பழ.கோபால் குடும்பத்தார் அனைத்துப் பக்குவநிலைகளையும் பெற்று யாகப் பயன்களைப் பெற்றார்கள். இரவு புகைவண்டியில் திரும்பும் போதே அருளுலகத்தார்கள் குருதேவருக்கு "**நிறையக்ஞர்**" என்ற அருட்பட்டத்தையும், "**கருவறை மூலவர்களின் அம்மையப்பர்**" என்ற அருட்பட்டத்தையும் வழங்கினர். இன்று முதல் இப்பட்டத்தை அனைவரும் பயன்படுத்திட குருவாணை வழங்கப்படுகிறது.

**திருவோலை நாயகம்: இரா.சீனிவாசன்,**

**10/2/87.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>மெய்ஞ்ஞானக்கொடி பயன்படும் விதம்</u>

செம்பியம்,
28.1.87.

பேரார்வமும் நம்பிக்கையும் உடைய திரு இராசு அவர்களுக்கும், திருமதி கனகா அவர்களுக்கும் (கல்லங்குளம், சேலம் மாவட்டம்-636301) ஞாலகுரு, குருமகாசன்னிதானம், குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, சித்தர் கருவூறார் தமது ஓலைநாயகத்தின் மூலம் விடுக்கும் திருவோலை:

1) தங்களின் உள்நாட்டஞ்சல் கிடைத்தது. தங்கள் வீட்டில் மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றிக் கொண்டுள்ளதாகவும், குறிப்பிடத் தக்க மாற்றம் ஏதும் விளையவில்லை எனவும், தங்களுக்கு ஏற்பட்ட கனவுக் காட்சி அநுபவத்தையும் அறிந்தோம். ஆனால், தங்களின் முழு முகவரி எங்களிடம் இல்லை; தாங்களும் கடிதத்தில் குறிப்பிடவில்லை; வருந்துகிறோம்.

2) தங்கள் வீட்டில் இயக்கத்தின் சார்பில் யார் வந்து கொடியேற்றினார்கள்? கொடி இ.ம.இ. கொடியா? அ.வி.தி. கொடியா? கொடிமரத்திற்கு அடியில் தாந்தரீகப் பூசைத் தகடு வைக்கப்பட்டுள்ளதா? இல்லையா? கொடியேற்றி எவ்வளவு நாட்கள் ஆகியுள்ளன? தாங்கள் எந்தக் காரணத்திற்காக கொடியேற்றிக் கொண்டுள்ளீர்கள்? தங்கள் குடும்பத்திற்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழுள்ள அருட்பணி விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தும் செயல்வீரர்கள் கணித்துள்ள கணிப்பின் விவரம் என்ன? தங்கள் குடும்ப விவரம் என்ன? ... என்பன போன்ற கேள்விகள் அனைத்திற்கும் பதில் எழுதினால் குருதேவரால் உரிய விளக்கம் தரமுடியும்.

3) <u>மெய்ஞ்ஞானக்கொடி என்பது குருதேவரும் அவரது அடியான்களும் தங்களது பூசையில் வெளிப்படுத்தும் அருளாற்றலைத் தங்களுக்கு வாங்கித் தரும் சாதனமே.</u> இதற்குத் தினமும் பகலில் அல்லது இரவில் 11-1½இல் தங்கள் வீட்டில் சமைக்கும் உணவில் சிறிது படைத்து ஊதுபத்தி காட்டி வழிபட வேண்டும். அதேபோல்,

தங்கள் இல்லத்திலுள்ள ஆண்களும், பெண்களும் அன்றூடம் நமது "பூசைமொழிகள்" என்ற ரூ.10/- விலையுள்ள புத்தகத்தில் உள்ள அனைத்து வாசகங்களையும் ஒருமுறை முழுமையாக ஓதிட வேண்டும். ஆணாக இருந்தால் காலையில் சூரியனைப் பார்த்தும், பெண்ணாக இருந்தால் மாலையில் குத்துவிளக்கு சோதியைப் பார்த்தும் இவ்வாசகங்களைக் கூற வேண்டும். இவைதான் பொதுவான விதிமுறைகள்.

4) இனிமேல் தாங்கள் குருதேவருடன் தொடர்பு கொள்வதற்கு முன்னால், இதுபோன்ற ஐயங்களை, தங்கள் மாவட்டத் தலைவர், செயலாளர் முதலியவர்களை அணுகி அவர்களின் கருத்துரைகளைப் பெற்ற பின்பு அவசியமென்றால் அவர்களின் பரிந்துரைகளோடு தங்கள் கடிதத்தினை அனுப்ப வேண்டும்; தங்கள் ஆர்வத்தினைப் பாராட்டுகிறோம். வாழ்க! வளர்க!

5) சேலம் மாவட்ட அ.வி.தி. அமைப்பாளர்களுள் ஒருவராகிய திரு இர.கங்காதரக்குமார் (முகவரி: C/O குமார் எலெக்ட்ரானிக்சு, 17 கவரைத் தெரு, இராசிபுரம், சேலம் மாவட்டம்-637408), சேலம் மாவட்ட இ.ம.இ. தலைவர் திரு சு.குழந்தைவேலு (மாட்டுவேலம்பட்டி, பழந்தின்னிப்பட்டி(P.O.), வெண்ணந்தூர் வழி, இராசிபுரம் வட்டம்) ஆகிய இருவருடனும், சேலம் மாவட்டத் தலைமைச் செயலகம் சித்தர்நெறித் தருகுலம் பொறுப்பாளர் திரு சீ.மணி (2/24, புதிய வீதி, வேம்படிதாளம்-637504) ஆகியவருடனும் தொடர்பு கொள்ளுங்கள். இக்கடிதத்தினை அவர்களிடம் காட்டி உரிய விளக்கம் பெற்றுக் கொள்ளுங்கள்.

**குறிப்பு**:- இத்துடன் குங்குமம், அருளூறு பூசனைப் பொருளாக அனுப்பப்படுகிறது. இதனை மேலும் குங்குமத்தோடு கலந்து குடும்பத்தார் அனைவரும் அணிந்து கொள்ளுங்கள்.

**ஓலைநாயகம்**
**சுந்தரானந்தன்,**
**28/1/87.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருதேவரின் முயற்சி

**'வழிபாட்டு நிலையங்கள் மானுடத்தின் விழிகள்.'**
**'இறைமை நினைவே குறைகளை நிறைவு செய்யும்.'**
**'குருவழி அனைத்துக்கும் கருவழி.'**
**'உருவ வழிபாடே அருவுருவ சித்தியின் சத்திநிலை.'**
**'ஐந்தீ ஓம்பலே ஐம்புலனை வெல்லும் வழி.'**
**'அடியார்களைத் தொழலே முடிவிலா இன்பம் தரும்.'**
**'அனாதியும் ஆதியும் ஆறுகாலத் தொழுகையால் அறியப்படும்.'**
**'ஆலயமும் கோயிலும் அற்றதை உற்றதாக்கும்.'**
**'பொய்யடிமை யில்லா மெய்யடியாரே சித்தர் நெறியார்.'**

- என்ற இந்தக் குருபாரம்பரிய வாசகங்கள் சித்தர் நெறி வாசகங்களுள் அடங்கும்.

நெடிய பெரிய இடைவெளிக்குப் பிறகு தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற உணர்வு தழைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் கீழ்க்கண்ட எட்டுவகைப் பீடங்களை பல கருவறைக்குள் அமைத்ததோடு, பலருடைய பூசை அறைகளிலும் அமைத்திட்டார். அதன்பயனாக, கி.பி.785 முதல் கி.பி.1279 முடியத் தமிழகத்தில் ஒரு பேரரசு உயிர் பெற்றிருந்தது. அதுபோல 700 ஆண்டுகளுக்குப் பிறகு எம்மால் கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள், யாகசாலைகள், பஞ்சாக்கினி குண்டங்கள், பூசையறைகள், நாற்பத்தெட்டு வகை அருளாளர்கள், நாற்பத்தெட்டு வகை வழிபடுநிலையினர்; அறுபத்துநான்கு ஆயகலையினர், நாற்பத்தெட்டு அருட்கலையினர், பன்னிரண்டு கடவுட்கலையினர், பன்னிரண்டு தெய்வீகக்கலையினர், பன்னிரண்டு பேய்க்கலையினர், பன்னிரண்டு நோய்க்கலையினர், பன்னிரண்டு தேய்கலையினர் = 160 வகைக் கலைஞர்கள்; உயிர்ப்பு மீட்டப்பட்ட 108 திருப்பதிகள் + 243 சத்தி பீடங்கள் + 1008 சிவாலயச் சக்கரங்கள்.... என்று எல்லாவகையிலும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு எனும் முக்கோணக் கோட்டை வலிமையுற, வளம்பெற, பொலிவுற்றிட, ஆட்சிபெற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**

**- குருபாரம்பரிய வாசகம்.**





தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் (கி.பி.785 - 1040).

11வது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org
Email: indhuism@gmail.com